**களனி பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 செப்டெம்பர் 03 ஆந் திகதியன்றும் தலைவரிற்கு அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான களனி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குகேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் ரூபா 1,888,786 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நிலையான சொத்துக்களது சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படும் |
| (ii) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகள் ரூபா 130,215,203 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | சரியான பெறுமதி கணக்கிடப்பட்ட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கு தயாரிப்பின் போது நாட்குறிப்பு மூலம் திருத்தம் செய்யப்படும். |
| (iii) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 16 கணக்கீட்டு விடயங்கள் மற்றும் உப பதிவேட்டு மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 443,089,709 வேறுபாடு நிலவியது. | தொடர்புடைய மீதிகளது வேறுபாட்டை சீராக்கம் செய்து திருத்தம் மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக் கணக்குத் தயாரிப்பின் போது திருத்தம் செய்யப்படும். |

**1.3 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (எ) | நிதிப்பிரமாணம் 396 | ஆறு மாதங்களைக் கடந்த ரூபா 282,945 பெறுமதியான 17 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏனைய காசோலைகளை வருவாயிலிட நடவடிக்கை எடுக்கப்படகின்றது. இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பெறப்பட்ட காசோலைகள் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் தீர்வு செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2012 சனவரி 03 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை 3.2 ஆம் பந்தி | சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும் போது குறித்த தகைமைகள் பரிசீலிக்கப்படாது 30 செயற்திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெருமளவு செயற்திட்டங்களை சபை பெற்றமையாலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சங்கங்களே பதிவு செய்யப்பட்டிருந்ததாலும் சமுதாய அமைப்புகளுக்கு செயற்திட்டங்களை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. |

**1.3 நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினததிலும் கூடிய வருவாய் ரூபா 93,491,106 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 68,430,011 ஆகும்.

**2.2 நிதிக்கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 முதல் 2018 டிசெம்பர் வரை நிலவி வரும் கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 1,197,593 பெறுமதிக்குரிய 24 காசோலைகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கொண்டு தகவல்களைக் கண்டறிந்து சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன.**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 55,501,000 | 58,828,222 | 58,149,428 | 24,509,950 | 53,550,000 | 54,958,058 | 62,275,053 | 25,212,921 |
| வுாடகை | 20,672,596 | 22,208,754 | 21,293,547 | 6,197,573 | 19,717,347 | 22,671,017 | 23,325,061 | 5,127,727 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,801,000 | 1,858,368 | 1,858,368 | - | 1,552,500 | 1,829,128 | 1,829,128 | 359,566 |
| ஏனைய வருவாய் | 151,025,250 | 187,926,315 | 187,926,315 | - | 127,765,500 | 93,240,090 | 93,252,089 | - |

**2.3.2 தீர்வையும் வரியும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை வழங்கிய தீர்வைக்குரிய காலப் பகுப்பாய்வின் படி 1–3 ஆண்டுகளாக ரூபா 7,521,186, 3-5 ஆண்டுகளாக ரூபா 5,738,965, 5-10 ஆண்டுகளாக ரூபா 9,517,119, 10 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 4,152,053 என மீதிகள் இருந்தன. | நெடுங்காலத் தீர்வை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வு ஒன்றை மேற்கொண்டு உள்ளவாறு கிடைப்பதற்கல்லாத சொத்துக்களுக்குரிய நிலுவையை சட்டபூர்வமாகப் பதிவழிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டின் பின்னர் தீர்வை மறுசீரமைக்கப்படவில்லை | புதிய தீர்வை மதிப்பீடு தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீட்டை தயாரித்து தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் தொடாச்சியாக நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டவாறு உள்ளன. |

**2.2.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 76 சபைகளிலிருந்து ரூபா 2,227,286 கடை வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. 103 கடைகளுக்கு எழுத்துமூல உடன்படிக்கை இருக்கவில்லை. உடன்படிக்கை இல்லாது வாடகைக்கு வழங்கப்பட்ட 36 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவை ரூபா 1,078,327 ஆகவுமிருந்தது. | அறவிடப்பட வேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்சமயம் உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கை றேம்கொள்ளப்பட்டுள்ளது. உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த கடைகளுக்குப் புதிய மதிப்பீட்டு அறிக்கையை பெறுவதற்கு விலை மதிப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3.4 ஏனைய வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 64 தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,000 வீதப்படி ரூபா 75,000 வருமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. ஏனைய தொலைத்தொடர்புக் கோபுரங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிட அல்லது அவை செயற்படாதன என்பதை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சகல தொலைத்தொடர்புக் கோபுரங்களிலிருந்தும் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்சமயம் கோபுரக் கட்டணத்தை அறவிடுவதற்கான விதிமுறைகள் அமுலாகியுள்ளன. பிரதேசத்திலுள்ள கோபுரங்களை இனங்காண்பதற்காக கணிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | சபையின் பிரதேசத்திற்குரிய இடங்களில் 64 தொலைத்தொடர்பு கோபுரங்கள் இருந்த போதும் அந்த 64 கோபுரங்களிலிருந்தும் வருடாந்த மதிப்பீட்டின்படி தீர்வை வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணிப்பு றேம்கொண்டு சகல போபுரங்களையும் இனங்காண வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் வா்த்தக வரியை முற்றாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பாவணைச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தலும் நிர்வகித்தலும், மக்களது சுக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபை நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிதேச சபைக்காக அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 30 பிரதான பணிகள் நிறைவேற்றப்படுவதற்கான உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 26 பணிகளுக்கு மாத்திரமே உப விதிகள் தயரிக்கப்பட்டிருந்தன. | நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | அந்த உப விதிகள் எமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய விடயங்களுக்கானவை அல்ல எனத் தெரிவிக்கின்றோம். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

**கணக்காய்வு அவதானிப்பு**

தயாரிக்கப்பட்ட உபவிதிகளின் படி 05 பணிகளுக்கு செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த நலனை (Outcome) பெறாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| களனி பஸ் தரிப்புக் கடைகளை நிர்மாணிப்பதற்கு சபையின் நிதியிலிருந்து ரூபா 27,985,429 செலவிடப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலைக்கான காணியினது சட்டபூர்வ உரித்தை உறுதிசெய்யாது நிர்மாணப் பணி மேற்கொள்ளப்பட்டதால் 2016 முதல் பெறவேண்டிய நலன் கிடைக்காதுபோனது | மேற்கொண்ட செலவுகளுக்கேற்ப நலனைப் பெற வேண்டும். | வாய்மூல அங்கீகாரத்துடன் குறித்த கட்டிடக் காணி தற்போது அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் அளவீடு செய்யப்பட்டுள்ளது. |

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவு அகற்றல் மற்றும் முகாமைத்துவத்திற்கென உப விதிகளும் கழிவுப் பொருட்களுக்கான வரி அறவீடும் மேற்கொள்ளப்படவில்லை. | உப விதிகளைத் தயாரிப்பதற்கும் கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஒக்டோபர் முதல் கழிவுப்பொருள் கட்டண அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | கழிவுப் பொருட்கள் அகற்றும் காணிக்கு கணக்காய்வுத் தினமான 2019 மே 07 வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதும் வழங்கப்படவில்லை. |

**3.2 பொது மகக்ளின் புகார்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பொதுமக்களிடமிருந்து 168 புகார்கள் கிடைக்கப்பெற்று 115 புகர்கள் தீர்வு செய்யப்பட்டிருந்தன. 20 பரிசீலனை மட்டத்திலிருந்தன. 33 தீர்வு செய்யப்படாதிருந்தன. | பொது மக்களின் புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.3 சொத்து முகாமைத்துவம்**

**சொத்துக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணிப்பின் மூலம் சபைக்குரியதாக இனங்காணப்பட்ட காணிகள் கட்டிடங்கள் என்பவற்றில் உரித்துறுதி இல்லாத 43 காணிகள் இருந்தன. சில காணிகளுக்கு அவற்றினது வரைபடங்கள் மாத்திரமே இருந்ததுடன் 5 சொத்துக்களுக்கு எதுவித ஆவணங்களும் இருக்கவில்லை. | சபையின் சொத்துக்களது உரித்தை உறுதி செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விசேட படிவத்தில் தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிட்ட காணிகளுள் 25 காணிகளது பெறுமதி குறிப்பிடப்படவில்லை. | சொத்துக்களது பெறுமதி உறுதி செய்யப்பட்டுக் கணக்கிடப்பட வேண்டும். | நில அளவையாளர் திணைக்களத்தினூடாக பெறுமதியைச் சரிவர அறிந்து கொள்வதற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்படும். |

**3.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகனனமொன்றும் பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட ரூபா 13,322,320 பெறுமதிகளான 4 வாகனங்களும் 2019 மே 08 ஆம் திகதியளவிலும் சபையால் சுவீகரிக்கப்படாதிருந்தன. | வாகனங்களைச் சட்டபூர்வமாகச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட வாகனங்களை எமது சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.5 பொருட்கணிப்பு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குருநான்சேகேவத்த வீடமைப்புத்திட்டத்தில் உள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் பூங்கா இருந்த இடத்தில் புத்தர்சிலை அமைந்திருந்தன. வனவாசல விளையாட்டுத்திடலும் தற்போது காண்பதற்கில்லை. | சபையின் காணிகளைப் பாதுகாக்க வேண்டும். | சபைக்குரியதாக உறுதி செய்யப்படட்ட காணிகளில் வேலி அமைக்கப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு பெயர்ப்பலகைகள் நிறுவப்படும். |
| (ஆ) | பயன்படுத்த முடியாத 1,265 புத்தகங்கள் 11 நூலகங்களில் இருந்தன. பொருட்கணிப்பின் போது சமர்ப்பிக்கப்படாத 1,518 புத்தகங்கள் சம்பந்தமாகவும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட புத்தகங்கள் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருள் கை தவிர்ப்புச் சபையை விரைவில் நிறுவி அது தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நிர்மாணித்த 44 வீதிகளில் பயன்படுத்தப்பட்ட குற்றிகளாக | பொறுப்பான உத்தியோகத்தர்கள் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டு |

| | | |
|---|---|---|
| உள்ள கற்களின் மாதிரியை பரிசீலிப்பதற்கு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு ரூபா 364,512 வழங்கப்பட்டிருந்தது. எனினும், பரிசீலனைக்குட்படுத்திய கற்கள் குறித்த வீதிகளுக்கல்லாத இன்று வீதிகளில் பயன்படுத்தப்பட்டவற்றின் மாதிரிகள் என நேரடிப் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டது. | இனங்கண்டு அறவீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | சித்திபெறாத கற்கள் உள்ள வீதி மீண்டும் திருத்தம் செய்யப்படுகின்றது. கற்கள் பரிசீலனைக்கு அனுப்பப்படும் போது ஒப்பந்தங்களுக்கு பணம் வழங்கப்படாது. எனினும், வீதி வேலை நிறைவில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் என்றும் தயவுடன் தெரிவிக்கின்றோம். |

**3.7 வழங்கலும் சேவைகளும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 பெப்ரவரி 09 ஆந் திகதியன்று 14 குளிரூட்டிகள் ரூபா 4,476,950 இற்கு சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட போதும் பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 8.9(ஆ) பிரகாரம் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. | பொருட்கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தற்போது உடன்படிக்கைக்கு உட்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை கைச்சாத்தானதும் பிரதியொன்று அனுப்பப்படும் என்றும் அறிவிக்கின்றோம். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் 5000 மின்குமிழ்களைக் கொள்வனவு செய்யும் போது பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 இற்கமைய கேள்விகள் தொழில்நுட்ப பகுப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 8.9 (ஆ) இற்கமைய குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவுமில்லை. | பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் 5000 மீன்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் இதுவரை மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை. தற்போது தொழில்நுட்பக்குழுவின் பரிந்துரைக்கமைவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள வழங்குநருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.8 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ரூபா 28,360,551 செலவில் வீதிகளில் 44 கொங்கிறீட் கற்களைப் பதிக்கும் போது பயன்படுத்திய கற்களின் அழுத்தச்சக்தி பரிசீலிக்கப்பட்டு 21 மாதிரிக் கற்களில் 14 கற்களது அழுத்தசக்தி எதிர்பார்த்தவாறு இல்லாமை உறுதியாகியது. | நிர்மாண வேலையின் போது எதிர்பார்த்த அழுத்தசக்தி பொருட்கணிப்பு அறிக்கைகளில் உறுதிசெய்யப்பட வேண்டும். | கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறைந்த அழுத்தசக்திக் கற்கள் பதிக்கப்பட்ட வீதிகள் மீண்டும் திருத்தம் செய்யப்படுகின்றன. |